# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.92/2024

### அ.சா. 1 (LW 1)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. குழந்தை தெரசு** | **தொழில்** | |
| **த/ பெயர்** | ஆரோக்கியசாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **16.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி பிடி வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சவரிபார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சம்பவத்தின் போது தோட்டத்தில் குடியிருந்து வந்தேன். வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். நான் 8வது வரை படித்துள்ளேன். வழக்கில் இறந்து போன ஆரோக்கியசாமி எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த 18.07.2022 அன்று நானும் எனது அப்பா அமல்ராஜ்ம் தோட்டத்து வீடடில் இருந்தோம். இறந்து போன ஆரோக்கியசாமி வீட்டில் இருந்தார். நான் தோட்டத்திற்கு சென்று விட்டு 1மணி நேரம் கழித்து வீட்டில் வந்து காலை 08.30 யிலிருந்து 09.00மணி அளவில் பார்த்தபோது எனது கணவர் சேரில் உட்கார்ந்தவாறு தலையில் காயத்தோடு இறந்த நிலையில் இருந்தார். அந்தசமயத்தில என் அப்பா வீட்டில்தான் படுத்திருந்தார். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகாரை நான் சொல்லச் சொல்ல போலிசார் எழுதினார்கள். நான் கையொப்பமிட்டேன். புகாரிலுள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. அது **அ.த.சா.ஆ.1**. ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகள் எனது தங்கை பிரான்சிஸ்மேரியின் கணவர் மற்றும் இரண்டு மகன்கள் ஆவார்கள். அவர்களும் எங்களுக்கும் மாரம்பாடி பெரியகுளத்துப்பட்டியில் உள்ள நிலம் சம்மந்தமாக 2020,2021 வாக்கில் பிரச்சனை சம்மந்தமாக என் கணவர் காவல்நிலையம் போய் வந்தார். அதன் பின்னிட்டு முதல் கொரனா வந்த சமயத்தில் ஹைதராபாத் சென்றோம். அங்கு வைத்து என் கணவருக்கு மருத்துவர் பார்த்தோம்.2021 வாக்கில் ஹைதராபாத்திலிருந்து திரும்பி வந்தோம். பிரச்சனைக்குரிய சொத்தை விற்க முயற்சி செய்தோம். 2ம் எதிரி சில நபர்களை கூட்டி வந்து சொத்தை விற்கும்படி சொல்லி வந்தார். அதற்கு என் கணவர் மொத்தமாக தொகை கொடுப்பவரிடம் சொத்தை விற்கலாம் என சொல்லி வந்தார். அதன் பிறகு என்ன நடந்தது என தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநீயம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

என் கணவரும் 2ம் எதிரியும் அங்காளி, பங்காளி ஆவார்கள். பிரச்சனைக்குரிய 7 ஏக்கர் சொத்தை பாகவிஸ்தி பண்ணாமல் தனிதனியே அனுபவித்து வந்தோம். அவர்களின் பங்கு நிலத்தை வேலி போட்டு அடைத்து விட்டார்கள், அதனால் எங்கள் இடத்திற்கு போக வழியில்லாமல் வேறு வழியில்லாமல் ஹைதராபாத்தில் உள்ள எனது தம்பி வீட்டிற்கு சென்று விட்டோம். பிரச்சனைக்குரிய இடத்தை மேலும் பயன்படுத்த முடியாது என்பதால் விற்க முடிவு செய்தோம். 2ம் எதிரி மேற்படி சொத்திற்கு அட்வான்ஸ் தொகையாக எங்களிடம் ரூ.50ஆயிரம் கேட்டார். அதற்கு இறந்து போன என் கணவர் என் சொத்திற்கு ஏன் அட்வான்ஸ் தொகை கொடுக்க வேண்டும் என சொன்னார். கூட்டுச் சொத்தை விற்க வேண்டும் என்றால் செபஸ்தியாரின் அம்மாவும், எனது கணவரும் கையெழுத்து போடவேண்டும் என்றால் சரிதான். எதிரிகள் ரூ.5 லட்ச ரூபாய் கொடுத்தால்தான் கையெழுத்து போட வருவோம் என மிரட்டினார்கள் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் செபஸ்தியார் சொன்னார். அதனால் என் கணவருக்கும் எதிரிகளுக்கும் முன் பகை இருந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பகையை மனதில் வைத்துக் கொண்டு பிரவின் லாரன்ஸ் பணத்தை கொடுத்தால்தான் கையெழுத்து போடுவோம் என கேட்டு வந்த போது நானும் மற்றும் என் அப்பா, எனது கணவர் இருந்தோம் என்றால் நான் தோட்டத்திற்கு சென்று வந்தேன். 18.07.2022 அன்று காலை 09.00மணிக்கு பிரவின் லாரன்ஸ் என் கணவரிடம் வந்து பணம் கேட்ட போது அதனால் என்கணவருக்கும், பிரவின் லாரன்ஸ்க்கும் பிரச்சனை வந்ததில் எனது வீட்டில் உள்ள கறி வெட்டும் கட்டையை கொண்டு என் கணவரின் தலையில் அடித்து விட்டார் என்றாலும் நான் அதை பார்த்தேன் என்றாலும் சரியல்ல. சம்பவத்தை நான் என் அப்பாவும் பார்த்து தடுக்க முற்பட்ட போது நான் கதறி அழுததை பார்த்து எங்கள் ஊரைச் சேர்ந்த மரியஇன்னாசியும், சூர்யாவும் வந்ததார்கள் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவரை பிரவின் லாரன்ஸ் கட்டையை எடுத்து அடிப்பதற்கு காரணம் ஏனை எதிரிகளின் தூண்டுதலால்தான் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரவின் லாரன்ஸ் என் வீட்டிற்கு சம்பவத்தன்று இருசக்கர வாகனத்தில் வந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நான் பார்த்தும், நான் சம்பவத்திற்கு பிறகு வெளியூருக்கு சென்று விட்டேன் என்றாலும், எதிரிகள் சொந்தக்காரர்கள் என்பதாலும் பிரச்சனை பேசி தீர்த்துக் கொண்டதாலும் எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகாரில் போலிசார் முன்னரே எழுதி வைத்ததில்தான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் தற்போது சொன்ன விவரங்களைத்தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது என்றாலும் போலிசார் என்னிடம் படித்துக் காட்டவில்லை என்றாலும் கையெழுத்து மட்டுமே போடச் சொன்னதால் போட்டேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் ஏற்கனவே போலிசார் புகாரை எழுதி வைத்திருந்ததில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் புகாரை படித்துப் பார்க்கும் நிலையில் நான் அன்று இல்லை. ஆகவே கையெழுத்து மட்டும் போட்டேன். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் முன்விரோதம் இல்லை என்றால் சரிதான். புகாரில் எதிரிகளின் பெயர்எழுதப்பட்டிருந்ததா என எனக்கு தெரியாது.

**மறு விசாரணை –இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.16 21:03:43 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.